### தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர்

# சரத்பவார் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை. டிச. 13- தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் சரத்பவார் அவர்களின் பிறந்தநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**



தேசியவாத காங்கிரஸ் (சரத்சந்திர பவார்) கட்சியின் தலைவர் சரத் பவார் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த பிறந்தநாள் வாழ்த்துகள். பொதுவாழ்விலும் நாட்டின் வளர்ச்சியிலும் தங்களது அளப்பரிய பங்களிப்புகள் பெரும் ஊக்கமாக விளங்குகின்றன.

தங்களது சீரிய தலைமை தொடர, நல்ல உடல்நலத்துடனும் வலிமையோடும் தாங்கள் திகழ விழைகிறேன்.

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.கழக ஆட்சிக் காலம்தான்

# ஆதிதிராவிடர் - பழங்குடியின மக்களுக்கு பொற்காலம்!

## தமிழ்நாடு அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் கூட்டமைப்பின் தலைவர் சா.அருணன் ஆதாரங்களுடன் அறிக்கை!

சென்னை, டிச. 13- தி.மு.க. ஆட்சிக்காலம் தான் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினருக்கு பொற்காலம் என தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நலகூட்டமைப்பின் நிறுவனத்தலைவர் சா.அருணன் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சி காலத்தில் தான் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினருக்கு எண்ணற்ற சலுகைகளை வழங்கினார் என்பதை அனைத்து தலித் மக்களும் மறக்கமாட்டார்கள். சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் தலைமையில்அரசியல்அமைப்புச் சட்டத்தை உருவாக்கப்பட்டவுடன் இட ஒதுக்கீடு சட்டத்தையும் வடிவமைத்து பாராளுமன்றத்தில்சட்டம் ஏற்றி ஒவ்வொரு பிரிவினருக்கும் மேற்படிப்பிற்கும் வேலை வாய்ப்பிற்கும் இட ஒதுக்கீடு அமல்படுத்தப்பட்டது. அந்த வகையில்தலித்மற்றும்பழங்குடியினர் 16 விழுக்காடாகவும் இருந்ததை பின்பற்றி தமிழ்நாட்டில் 18 விழுக்காடாக உயர்த்தியும் மேலும்பழங்குடியினருக்கு 1 ஒரு விழுக்காடு என 19 விழுக்காடாகஉயர்த்தினார் முத்தமிழ்அறிஞர்கலைஞர்.

உள்ளாட்சி தேர்தலில் எந்த மாநிலத்திலும் பின்பற்றாதபோது தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர்மற்றும்பழங்குடியினருக்குஇடஒதுக்கீடு கொண்டுவந்துபட்டியலின மக்களையும் மேயராகவும், மாவட்டக்குழுத்தலைவராகவும் , ஊராட்சிக் குழுத் தலைவராகவும்,நகர்மன்றத் தலைவராகவும் , பேரூராட்சித் தலைவர்களா கவும் , ஊராட்சிமன்றத்தலைவராகவும், வார்டு உறுப்பினர்களாகவும் தேர்வு செய்து ஆட்சி அதிகாரத்தில் அமர வைத்து அழகு பார்த்தவர் முத்தமிழ்அறிஞர்கலைஞர்,

**அவர்களின் வாழ்வில் ஒளியேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர்!**

அதோடு அல்லாமல் ஆதிதிராவிடர் 18 விழுக்காடு ஒதுக்கீடு செய்ததில் அருந்ததியர் இன மக்கள் மேலும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த உள் ஒதுக்கீடாக 3 விழுக்காடு வழங்கி அவர்களின்வாழ்வில்ஒளியேற்றியவர்முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

சட்டமாமேதை அண்ணல் அம்பேத்கர் பிறந்த மாநிலமான மாராட்டிய மாநிலத்திலேயே அவர் பெயரில் கல்லூரியோ பல்கலைகழகமோ அமைக்காத சூழ்நிலையில் தமிழ்நாட்டில் டாக்டர் அம்பேத்கர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்தவர் தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர். அதோடுநின்றுவிடவில்லை சட்டப்பல்கலைக்கழகம்ஏற்படுத்திஅதற்குடாக்டர்அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் என பெயர் சூட்டியவர்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

எல்லோரும்சமம்என்பது பேச்சில்மட்டும்தான்என்றிருக்காமல் பெரியார் சமத்துவபுரம் ஏற்படுத்தி அதிலே ஆதிதிராவிடர்மற்றும்பழங்குடியினரும் மற்றவர்களோடு குடியிருக்க வேண்டும் என தொலைநோக்கு பார்வை கொண்டு 19 விழுக்காடு வீடுகளை ஒதுக்கி சமத்துவத்தைநிலைநாட்டியவர் தான் கலைஞர்.

ஆதிதிராவிடர் மற்றும் மாணவர்கள் ஏழ்மை நிலை காரணமாகமேற்படிப்பிற்கு செல்லஇயலாதநிலைஇருந்தது.இதனை அறிந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் குறைந்த அளவில் குடும்ப ஆண்டு வருமானம் உள்ள ஆதிதிராவிடர்மாணவர்கள் மேற்படிப்பு பயில ஊக்கத்தொகை வழங்கி மேற்படிப்பு பயில பேருதவி செய்தார்.மேலும்ஆதிதிராவிடர் மற்றும்பழங்குடியினர்சாதி மறுப்புதிருமணம்செய்தால் படிப்பிலும் வேலை வாய்ப்பிலும் முன்னுரிமை அளிக்கும் பொருட்டு சட்டம் இயற்றிசமத்துவத்தைநிலை நாட்டியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்!

**அண்ணலின் புகழினை பறைசாற்றியவர் தான் கலைஞர்!**

மகாத்மாகாந்தி,ராஜாஜி, காமராஜர், அறிஞர் அண்ணா ஆகியோருக்கு மணிமண்டபம் அமைத்தது போன்று அண்ணல் அம்பேத்கருக்கும் மணிமண்டபம் அமைக்க எண்ணி சென்னையில் மணிமண்டபம் அமைத்து அண்ணலின் புகழினை பறைசாற்றியவர் தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

மனிதனை மனிதனே சுமக்கும் கொடுமையைஇந்தியாவிலேயே தமிழ்நாட்டில் முதலில் கைரிக்‌ஷாவை ஒழித்து மனிதர்கள் அனைவரும் சமம் என்பதை நிலை நாட்டினார் , இதை ஏன் நினைவு படுத்துகிறேன் என்றால் கைரிக்‌ஷா இழுத்தவர்கள் பெரும்பாலும் பட்டியலினத்தவர்கள் என்பதால்.

ஆதிதிராவிடர்கள் பெரும்பாலும் குடிசை வீட்டிலேயே வாழ்கிறார்கள். குடியிருக்க இடம்கூட இல்லையே என அறிந்து குடிசை மாற்றுவாரியம் ஏற்படுத்தி அடுக்குமாடி வீடு கட்டி அதிலே குடி அமர்த்தி அழகு பார்த்தவர்தான் கலைஞர்.

கிராமப்புரத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பெரும்பாலான மக்கள் தங்க இடம் இருக்க வீடு இல்லை என்பதை அறிந்து வீடுகட்ட மூன்று சென்ட் நிலமும், கான்கிரீட் கூரையிலான தொகுப்பு வீட்டை கட்டித் தந்தவர்தான்முத்தமிழ்அறிஞர் கலைஞர். அமைச்சரவையில் ஆதிதிராவிடர் அங்கம் வகிக்கும் விதமாக ஆதிதிராவிடர் மக்கள்தனக்கென குறைகளை நிவர்த்தி செய்ய ஆதிதிராவிடர் நலத்துறைஏற்படுத்திதனிஅமைச்சரை நியமித்தார்.மேலும் முதன்முதலில் ஆதி திராவிடர்வகுப்பைசார்ந்தமுக்கிய மூன்று பிரிவுகளில்தலா ஒரு அமைச்சரை நியமித்தவர்தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

தன்கட்சியில்உட்கட்சித் தேர்தலில் பெரும்பாலும் ஆதிதிராவிடர்கள் அதிகம் தேர்வாக்கப்படுவதில் அறிந்து புது விதியை உருவாக்கிகிளையில்தொடங்கி மாநில அமைப்புவரை ஒரு ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவர் ஒருவர் துணைச் செயலாளராக இடம்பெற்றாக வேண்டும் என்பதை நிலைநிறுத்திக்கிக்குள்ளேயும்அதிகாரம்அளித்துசமத்துவத்தை உறுதிப்படுத்தினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாடு அடைய தாட்கோ அமைப்பை(தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் ) தொடங்கி அதற்கென தனி இயக்குநர் தனி தலைவரை ஏற்படுத்தி தொழில் தொடங்க கடன் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியதனில்35விழுக்காடு தள்ளுபடி வழங்கி ஆதிதிராவிடர்கள் தொழில் முன்னேற்றம் அடைய பெரிதும் உதவியாக உள்ளதை நினைவு கொள்ள வேண்டும். கலைஞர் ஆட்சி காலத்தில்தான் உயர் பதவிகளில் தலித் அதிகாரிகளை ஆட்சி அதிகாரத்தைநிர்ணயிக்கும் பொறுப்புகளை வழங்கினார். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

**தலித்களுக்கு வாய்ப்பளித்து சரித்திரம் படைத்தார்!**

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மறு உருவமாக திகழ்ந்து சமத்துவ நாயகனாகசெயலாற்றிவரும்முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தலில்பொது தொகுதியில் போட்டியிட தி.மு.க. சார்பில் தலித்களுக்கும்வாய்ப்பளித்துசரித்திரம் படைத்தார். அதாவது 2021ம் சட்டமன்ற பொதுத் தேர்தலில் சென்னை ஆர். கே.நகர்பொதுதொகுதியில் எபிநேசர் என்பவருக்கும் திருவள்ளூர்மாவட்டம்அம்பத்தூர்சட்டமன்றத்தொகுதியில்போட்டியிட ஜோசப் சாமுவேல் என்பவருக்கும் வாய்ப்பளித்து இருவரையும் சட்டமன்ற உறுப்பினராக்கி கட்சியிலும் சமத்துவத்தை நிலைநாட்டி சரித்திரம் படைத்துள்ளார். அது மட்டுமா நீண்ட காலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையம் அமைக்க கோரிக்கை வைக்கப்பட்டது ஆனால் கடந்த ஆட்சியாளர்கள் செவிக் கொடுக்கமறுத்துவிட்டனர். ஆட்சிக்கு வந்தவுடன்புதியதாக ஆணையத்தை உருவாக்கி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் காத்து வருகின்ற ஒப்பற்ற முதல்வராக திழ்ந்துவருகிறார். மேலும் அதிதிராவிடர்மற்றும்பழங்குடியினர் நலன் வன்கொடுமைசெய்வோர்மீதுநடவடிக்கை மேற்கோள்ள வன்கொடுமைகண்காணிப்புக் குழுவை சீரமைத்து தனது தலைமையில் கட்சி பாகுபாடுஇன்றிதமிழ்நாட்டில் உள்ள அனைத்து தலித் சட்டமன்ற- நாடாளுமன்ற உறுப்பினர்களை உறுப்பினர்களாக நியமித்து மாதந்தோறும் கண்காணிப்புக் கூட்டத்தைதனதுதலைமையில்நடத்திநலன்காத்துவருகிறார்.

அமைச்சர் மாற்றத்தின் போது கூடுதலாக வரலாற்றில் ஆதிதிராவிடர் வகுப்பைச்சார்ந்தஒருவரைஉயர் கல்வி அமைச்சராக கோவி செழியன் அவர்களை நியமித்து மொத்தம் நான்கு தலித் அமைச்சர்களை அமர வைத்து அழகு பார்த்துக் கொண்டு இருப்பவர் தான் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதோடு மட்டுமா தமிழ்நாட்டின் உயர் பதவியான தலைமைச் செயலாளர் பதவிக்குஒருபட்டியலினத்தை சார்ந்த முருகானந்தம் ஐ.ஏ.எஸ் அவர்களை நியமித்து சமத்துவத்தை நிலைநாட்டியுள்ளவர்தான்தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழிலில் முன்னேற்றம்அடையஅண்ணல் அம்பேத்கர் பெயரில் அம்பேத்கர்தொழில்முனைவோர் முன்னோடி திட்டத்தை தொடங்கி ரூ. 15 கோடிவரை கடன் வழங்கி 35 விழுக்காடு மானியமும் வழங்க உத்தரவிட்டு தனது திருக்கரங்களால் திட்டத்தையும் சமீபத்தில் தொடங்கிவைத்து பட்டியலினத்தவர்களும் தொழிலதிபராக மாறவேண்டும் என்ற முற்போக்குசிந்தனைகொண்டவர் தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

மேலும் ஆதிதிராவிடர் மேற்படிப்பிற்குஆண்டுவருமானம் ஒரு தடையாக உள்ளதைஇந்தியபிரதமர்நரேந்திர மோடிக்கு அவர்களுக்கு தெளிவு படுத்தி கடிதம் எழுதி ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ 2.லட்சத்து 50 ஆயிரம் என்று இருப்பதை ரூ.8.லட்சமாகஉயர்த்தவலியுறுத்தி கேட்டுக் கொண்டு உள்ளார்என்பதைஅனைவரும் உணரவேண்டும். யாருக்குதலித் மீது அக்கறை உண்டு என்பதை.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆட்சியிலும் கட்சியிலும் உள்ளாட்சியிலும் மாணவர்கள் உயர் கல்வி பெற தமிழ்நாட்டில் தலித் மக்களுக்கு சலுகைகளை வாரி வழங்கிய ஒரே அரசு அது திராவிட முன்னேற்றக் கழக அரசு மட்டும் தான் என்பதற்கு இதைவிட சான்று வேறு என்ன இருக்க முடியும்.

இவ்வாறு சா.அருணன் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.





இராயபுரம் கே.எம்.கணேசன், கே.எம்.தங்கராஜ் மயிலாடுதுறை தனசேகர் இல்ல திருமண விழா தண்டையார் பேட்டை கேப்டன் மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு உயர் கல்வி துறை அமைச்சர் கோவி. செழியன், சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., ராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி, ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே. எபினேசர், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் பி.டி.பாண்டி செல்வம், இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார் ஆகியோர் மணமக்கள் எம்.ஜி.ரம்யா – டி.இராமச்சந்திரன் ஆகியோரை வாழ்த்தினர். உடன்49 வது வட்ட கழக பொருளாளர் கலைசெல்வன், முன்னாள் வட்ட செயலாளர் எல்.சீனிவாசன், 51வது வட்டச் செயலாளர் கே.கோவிந்தராஜ்,கே.பாலகிருஷ்ணன், ஜி. கோதண்டன் மற்றும் வட்ட கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### முதலமைச்சர் ஆராய்ச்சி ஊக்கத் தொகைத் திட்டத்தின்கீழ்

### 69 மாணவ – மாணவிகளுக்கு ஆணை !

# 2 பேருக்கு 'பாரதி இளங்கவிஞர்' விருது - தலா ரூ 1 லட்சம் ஊக்கத் தொகை!

## உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் வழங்கினார்!

சென்னை, டிச.13- முதலமைச்சர் ஆராய்ச்சி ஊக்கத்தொகைத் திட்டத்தின் கீழ் 69 மாணவ மாணவிகளுக்கு ஆணை களையும், இரண்டு நபர்களுக்கு பாரதி இளங்கவிஞர் விருது மற்றும் தலா ரூ.1 இலட்சம் ஊக்கத்தொகையினையும் உயர்கல்வித்துறைஅமைச்சர் முனைவர் கோவி. செழியன் வழங்கினார்.



முதலமைச்சரின்ஆராய்ச்சி ஊக்கத்தொகை திட்டம் மற்றும் பாரதி இளங்கவிஞர் விருதுவழங்கும்திட்டங்களின் கீழ் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு ஊக்கத் தொகைக்கான ஆணைகள் மற்றும் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி உயர்கல்வித்துறைஅமைச்சர் முனைவர் கோவி. செழியன் தலைமையில் நேற்று முன்தினம் (11.12.2024) கல்லூரிக் கல்வி இயக்கக கூட்டரங்கில்நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித்துறைஅமைச்சர் கோ.வி. செழியன் தெரிவித்ததாவது:-

மாணவச் செல்வங்கள் படிப்பதற்கு, சமூகமோ, பொருளாதாரமோ,அரசியல் சூழ்நிலையோ எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்பதே முதலமைச்சர் அவர்களின்தலைமையிலான திராவிட மாடல் ஆட்சிக் கொள்கை யாகும். கல்வியும் சுகாதார மும் தனது இரண்டு கண்களாக பாவித்து முதலமைச்சர் அவர்கள் செயலாற்றி வருகிறார்.கல்வி ஒன்றே யாராலும் நம்மிடம் இருந்து பிரிக்க முடியாத பெரும் சொத்து, எனவே மாணவ மாணவிகள் அனைவருக்கும்கல்விசென்று சேரவேண்டும்என்றஉன்னத நோக்கத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் முதலமைச்சர் ஆராய்ச்சி ஊக்கத்தொகைத் திட்டம் (ChiefMinisterResearchFellowship) 30.08.2022 அன்று அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற பல்கலைக்கழக துணை வேந்தர் மாநாட்டில் தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தமிழ்நாட்டு மாணவர்களின் ஆராய்ச்சித் திறமையை மேம்படுத்துவதும், புதிய கண்டுப்பிடிப்புகளைத் தமிழ்நாட்டில் ஊக்கப்படுத்துவதுமே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். இந்த ஊக்கத்தொகை பெறமாநிலஅளவில்ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) தகுதித் தேர்வு மூலம் 120 மாணவ மாணவிகளை தேர்வு செய்யப்படுவர்.தமிழ்நாட்டு மாண வர்களிடையே ஆராய்ச்சிமனப்பான்மையை ஊக்கப்படுத்தும் வகையில், 120 என்ற எண்ணிக்கை தற்போது முதலமைச்சரின் அறிவுறுத்தலுக்கிணங்க 180 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசு கல்லூரிகளில் மட்டுமல்லாமல், அரசு உதவி பெறும் மற்றும் மாநிலப் பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. முனைவர்பட்டஆராய்ச்சிப் படிப்பைத் தொடர ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ.25,000/- வீதம் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது. கலைப்புலத்தைச் சார்ந்த மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ.10,000/- வீதமும், அறிவியல் பாடப்பிரிவைச் சார்ந்த மாணாக்கர்களுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ.12,000/- வீதமும், கூடுதலாக மாற்றுத்திறனாளி மாணவர்கள் ரூ.2,000/- இதரச் செலவினத் தொகையாக (Contigency) வழங்கப்படுகின்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆசிரியர் தேர்வு வாரியத் தகுதிதேர்வு மூலம் தெரிவுசெய்யப்பட்ட முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணாக்கர்களுக்குத் தமது திருக்கரங்களால் "முதலமைச்சர்" ஆராய்ச்சி ஊக்கத்தொகைத் திட்ட ஆணையினை 22.08.2024 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார். அதன்தொடர்ச்சியாகஇன்று இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் 25 மாணவர்களுக்கு மாதம் ரூ. 25,000/- முதலமைச்சரின் ஆராய்ச்சி ஊக்கத்தொகை வழங்கும் ஆணைகளையும், 44 மாணவர்களுக்கு ஊக்கத்தொகையாக பெறுவதற்கான செயல்முறை ஆணைகளும் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெற தேர்வு பெறும் மாணவர்கள் தமிழ்நாடு இடஒதுக்கீட்டு முறையை பின்பற்ற முதலமைச்சரின் ஆலோசனைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் முதலமைச்சர் அவர்கள் மாணவர்களின் நலன் கருதி இந்தியப் பிரதமருக்கு நேற்று அளித்த கடிதத்தில், பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான (Economically Weaker Section) வருமான உச்சவரம்பு 8 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது போல், ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் இதர பிற்படுத்தப்பட்டவகுப்பைச் சார்ந்த மாண வர்களுக்கான மெட்ரிக்படிப்புக்குமுந்தைய மற்றும்பிந்தையகல்விஉதவித் தொகை பெறுவதற்கான குடும்பவருமானஉச்சவரம்பு ரூ.2.5இலட்சத்திலிருந்துரூ.8 இலட்சமாக உயர்த்தி வழங்கிட வலியுறுத்தியுள்ளார்.

துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி நான் முதல்வன் திட்டத்தின்கீழ்மாணவர்கள் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்து கொள்ள ஏதுவாக போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் தொடங்கப்பட்டு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. மாணவர்கள் இதனை பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் வெற்றி பெற வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், விடுதலைப் போராட்ட தியாகிகள், மொழிப்போர் தியாகிகள், மிகச்சிறந்த ஆளமை மிக்க தலைவர்கள், தமிழ் வளர்ச்சிக்குஅரும்பாடுபட்ட அறிஞர் பெருமக்கள், இசை மேதைகள் ஆகி யோர்களின் நினைவுகளை போற்றிப் பெருமைப் படுத்துகின்ற வகையில், அரசின் சார்பில் நினைவகங்கள்,அரங்கங்கள், நினைவுத் தூண்கள் ஆகியன திராவிட மாடல் அரசால் தொடர்ந்துஅமைக்கப்பட்டு வருகிறது. நாடு காக்கவும், மொழி காக்கவும் உயிர் உடமைகள், உறவு களை இழந்த தியாக சீலர்களை மதித்துப் போற்றும் மரபை வளர்த்துள்ள நெறி மகத்தானது. நாடு காக்கவும், மொழிக்காகவும் பாடுபட்ட பேரறிஞர்கள், பெருந்தலைவர்களுக்கு எழுப்பப்படும் சிலைகள் வருங்காலத் தலைமுறையினருககு வழிகாட்டும் ஒளி விளக்காக ஊக்கமளிப்பதும் உண்டு என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழகம் எங்கும் தியாகிகளுக்கு கலைஞர் உருவாக்கிய நினைவுச் சின்னங்கள் எண்ணற்றவை. தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சரானவுடன் எட்டையபுரத்தில் உள்ள பாரதியார் பிறந்த வீட்டை அரசு சார்பில் விலைக்கு வாங்கி அதனை நினைவு இல்லம் ஆக்கினார்கள். தியாகிகளைப் போற்றிய தியாகசீலர் கலைஞர்.

அவர் வழியில் தற்போது முதலமைச்சர் அவர்களால் மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு நினைவாக, உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீடு கழக அரசின் சார்பில் ரூ.18 இலட்சம் செலவில் புனரமைக்கப்பட்டு அன்னாரின் மார்பளவு சிலையும் அமைக்கப் பட்டுள்ளது.மேலும்,ஆகஸ்ட் 15ஆம் நாள் கோட்டைக் கொத்தளத்தில்முதலமைச்சர் அவர்கள்தேசியக்கொடியை ஏற்றி வைத்துவிட்டு உரையாற்றும்போது, மகாகவி பாரதியார் மறைந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டதை கருத்திற்கொண்டுஅவர்புகழ் சேர்க்கும் வகையில் மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாள், அரசின் சார்பில் இனி ஆண்டுதோறும் 'மகாகவி நாளாகக்' கடைப்பிடிக்கப் படும். பாரதியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள், கட்டுரைகளைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்றபுத்தகமாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள்சுமார்37லட்சம் பேருக்கு 10 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும் என்றும், மேலும், பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாநில அளவில் கவிதைப் போட்டி நடத்தி 'பாரதி இளங்கவிஞர் விருது' மாணவன் ஒரு வருக்கும், மாணவி ஒரு வருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன்வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி,மகாகவிபாரதியார் நூற்றாண்டு நினைவாகப் "பாரதி இளங்கவிஞர் விருத" வழங்கும்திட்டத்தின்கீழ்ஒரு மாணவருக்கும் ஒரு மாணவிக்கும் தலா ரூபாய் ஒரு இலட்சம் ஊக்கத் தொகையினை வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

2024-2025ஆம்ஆண்டிற்கு செல்வி ஏ.விக்னேஸ்வரிக்கும் செல்வன் மதிராஜாவுக்கும் "பாரதி இளங்கவிஞர் விருது" மற்றும் தலா ரூபாய் ஒரு இலட்சம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. சுதந்திரப் போராட்ட தியாகிகளை மதித்துப் போற்றுவதில் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் செயலாற்றி வருவதற்கு இவ்விழாவே நல்உதாரணமாகும்.

இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், மற்றும் கல்லூரிக் கல்வி இயக்கக ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, ஆகியோர் உடனிருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறையூர் ந.குணசீலன்

### டிசம்பர் 13 (2015)



இளமைக் காலம் தொட்டு கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்.

தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையுடன் இறுதிவரை வாழ்ந்தவர்.

1993ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினராகவும், 1997ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2000ஆம் ஆண்டு முதல் பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், 2005ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2010ஆம் ஆண்டு முதல் இறுதி வரை பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**